S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 359 21.06.2026 SUNDAY AANI : 7 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 359 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை ஆனி : 7 விலை : ரூ.5/–

## 70 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு

# "பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்"

## 'நான் முதல்வன்' திட்டத்தை முடக்குவது இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயல்: மு.க.ஸ்டாலின்



சென்னை: ஜூன்.21-

"நான் முதல்வன் திட்டத்தை முடக்குவது தமிழக இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயலாக அமைந்துவிடும்" என தவெக அரசுக்கு முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கும்பகோணம் பள்ளியில் கடந்த 2004 ஆம் ஆண்டு நடந்த பயங்கர தீவிபத்தில் இருந்து, தப்பிய ஜெனிபர் என்ற சிறுமி இப்போது துணை ஆட்சியராக பதவியேற்கவுள்ளார். இவரது வெற்றிப் பயணம் குறித்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் தனது அனுபவத்தைப் பகிர்ந்துள்ள ஜெனிபர், "ஆரம்பக் காலத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக, போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத சூழல் இருந்தது.

அப்போது, தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் எனக்குக் கல்வி உதவித்தொகை கிடைத்தது. அதன் மூலம் அடையாறில் எட்டு மாதங்கள் தங்கிப் பயிற்சி பெற்றேன். அதன் பின்னரே என்னால் குரூப்1 தேர்வில் வெற்றி பெற்று, இன்று இந்த இடத்துக்கு வர முடிந்தது," என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இந்த வீடியோவை மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்து, "நீங்கள் (தவெக அரசு) 'நான் முதல்வன்' சோஷியல் மீடியா பக்கங்களின் பெயரை மாற்றலாம். அதில் இருந்த பதிவுகளை டெலிட் செய்யலாம். ஆனால், இதுபோல ஆயிரம் ஜெனிபர்களின் கனவை நனவாக்கிய நான் முதல்வன் திட்டத்தின் சாதனைகளையும் நன்றியுணர்வையும் மக்கள் மனங்களில் இருந்து டெலிட் செய்யவே முடியாது. அவை அவர்களின் இதயத்தில் ஆழமாக Archive செய்யப்பட்டுவிட்டன.

கடந்த 5 ஆண்டுகளாக, எனது ஆட்சிக்காலத்தில் "படிங்க, படிங்க, படிங்க" என்று தொடர்ந்து சொல்லி வந்தேன். அப்படி படித்து முன்னேற விரும்பும் இளைஞர்களுக்கு உதவத்தான் நான் முதல்வன் எனும் என் கனவுத் திட்டத்தைத் தொடங்கினேன். அதனை முடக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயலாக அமைந்துவிடும்!" என்று தவெக அரசை அவர் எச்சரித்துள்ளார்.

புதுடெல்லி: ஜூன்.21-

பிஎம் விக்சித் பாரத் ரோஜ்கர் யோஜனா திட்டத்தில் இதுவரை 70 லட்சம் பேர் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் தேதி பிஎம் விக்சித் பாரத் ரோஜ்கர் யோஜனா திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி தனியார் நிறுவனங்களில் புதிதாக பணியில் சேரும் இளைஞர்களுக்கு மத்திய அரசு சார்பில் ரூ.15,000 ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் நிதி வழங்கும் விழா டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று நாடு முழுவதும் 15 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.2,400 கோடி ஊக்கத் தொகையை வழங்கினார். அப்போது அவர்



பேசியதாவது: தொழில் துறை, தொழிலாளர்கள் இடையே பிஎம் விக்சித் பாரத் ரோஜ்கர் யோஜனா திட்டம் பாலமாக செயல்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 70 லட்சம் பேர் வேலைவாய்ப்பினை பெற்று உள்ளனர்.

தனியார் நிறுவனங்கள் இத்திட்டத்தில் ஆர்வமாக பங்கேற்று புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன. இன்றைய உலகம், இந்தியா மீது பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது. இந்திய இளைஞர்கள் தங்களின் படைப்பாற்றல் மற்றும் திறன்களின் மூலம் உலகத்தின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும். வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து உள்ளோம்.

இந்த இலக்கை எட்ட இந்திய இளைஞர்களும் நாட்டு மக்களும் கடினமாக உழைக்க வேண்டும். 6 மாத இடைவெளியில் இரு தவணைகளாக ஊக்கத் தொகை வழங்கப்படும். மேலும் தனியார் நிறுவனங்களுக்கு ஒரு வேலைவாய்ப்புக்கு ரூ.3,000 என்ற வகையில் மாதந்தோறும் ஊக்கத் தொகை வழங்கப்படும். இந்த தொகை 2 ஆண்டுகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

## தவெகவில் நடிகர் மன்சூர் அலிகான், இயக்குநர் ஆர்.வி.உதயகுமார் ஐக்கியம்

சென்னை: ஜூன்.21-

நடிகர் மன்சூர் அலிகான், இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், முன்னாள் அமைச்சர் கோமதி உள்ளிட்டோர் இன்று தவெகவில் இணைந்தனர். அப்போது, "அதிமுகவும் தவெகவும் எப்போதும் ஒன்றுதான். இரு கட்சிகளுக்கும் ஒரே கொள்கைதான்" என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் மாற்று கட்சியினர் இணைப்பு விழா நடந்தது. தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் நடிகர் மன்சூர் அலிகான், இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், முன்னாள் அமைச்சர் கோமதி உள்ளிட்டோரை வரவேற்றனர்.



இந்த நிகழ்வில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "50 ஆண்டுகள் பழமைவாதியான செங்கோட்டையனை கட்சியிலிருந்து நீக்கியது அதிமுக தலைமையின் தவறு. வந்தால் பதவி தருவோம் என கூறி வியாபாரம் செய்யும் கட்சி தவெக இல்லை.

அதிமுகவும் திமுகவும் ஒன்று சேர்ந்துவிட்டனர். அதனால் தான் அதிமுகவினர் தவெகவில் இணைகின்றனர். அதிமுகவின் 90 சதவிகித தொண்டர்கள் தவெகவை நோக்கி வர ஆரம்பித்துவிட்டனர். அதிமுகவும், தவெகவும் எப்போதும் ஒன்றுதான். இரு கட்சிகளுக்கும் ஒரே கொள்கைதான்" என்றார்.

முன்னதாக, அதிமுகவை சேர்ந்த 4 எமஎல்ஏக்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சியில் இணைந்ததை தொடர்ந்து, அதிமுக முன்னாள் எம்.பி, எம்எல்ஏக்கள் என பலரும் இணைந்தனர்.

கடந்த வாரம் பாஜகவை சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ விஜயதரணி, அதிமுக முன்னாள் அமைச்சர் பச்சைமால் உள்ளிட்ட பலர் கட்சியில் இணைந்தனர். இரண்டு நாட்களுக்கு முன்னர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சி.மகேந்திரன் தவெகவில் இணைந்தது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் குறைகளைத் தீர்க்க...முதல்வர் விஜய் பிறந்தநாள் பரிசாக

# 'நம்ம ராதாபுரம்' வெப்சைட் அறிமுகம்!

## Dr.சதீஷ் கிறிஸ்டோபர் MLA-வின் டிஜிட்டல் புரட்சி!

ராதாபுரம், ஜூன் 21:

வெற்று பேனர்களுக்கும், ஆடம்பரக் கொண்டாட்டங்களுக்கும் லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழிக்கும் அரசியல் கலாச்சாரத்திற்கு மத்தியில், தொகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க இப்படியொரு டிஜிட்டல் கட்டமைப்பை உருவாக்கியிருப்பது போற்றத்தக்கது.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, ராதாபுரம் தொகுதி பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கும் உன்னத நோக்கில், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் Dr.சதீஷ் கிறிஸ்டோபர் அவர்கள் 'நம்ம ராதாபுரம்' என்ற பிரத்யேக இணையதளத்தை (Website) அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைக்கிறார்.

**முதல்வர் பிறந்தநாள் பரிசும் டிஜிட்டல் சேவையும்:**

தமிழக முதல்வர் விஜய் அவர்களின் பிறந்தநாளை ஆடம்பரமாகக் கொண்டாடுவதைத் தவிர்த்து, மக்களுக்குப் பயனுள்ள வகையில் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இந்த இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட சாமானிய பொதுமக்கள் இனி தங்களின் குடிநீர் வசதி, சாலை வசதி, மின்சாரப் பிரச்சினை மற்றும் உள்ளாட்சி நிர்வாகக் குறைபாடுகள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியக் கோரிக்கைகளையும் இந்த 'நம்ம ராதாபுரம்' வெப்சைட் மூலம் வீட்டிலிருந்தபடியே நேரடியாகப் பதிவு செய்ய



முடியும்.

**குறைகளுக்கு உடனடித் தீர்வு:**

இவ்விணையதளத்தில் பெறப்படும் மனுக்கள் மற்றும் புகார்கள் அனைத்தையும் எம்எல்ஏ Dr.சதீஷ் கிறிஸ்டோபர் அவர்கள் நேரடியாகக் கண்காணித்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறை அதிகாரிகளின் கவனத்திற்குத் துரிதமாகக் கொண்டு செல்வார். இதன் மூலம், சாமானிய மக்களின் பிரச்சினைகளுக்கு மிகக் குறுகிய காலத்திற்குள், எவ்வித அலைக்கழிப்போ, இடைத்தரகர்களின் தலையீடோ இன்றி, போர்க்கால அடிப்படையில் தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நவீன டிஜிட்டல் தளம் தொகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**சக்கர வியூகம் வாய்ஸ்:**

ஒரு மக்கள் பிரதிநிதி என்பவர் தேர்தல் காலங்களில் மட்டும் கை கூப்பி வாக்குக் கேட்டு வரும் தற்காலிக மனிதனாக இருக்கக் கூடாது. அவர் 365 நாட்களும் சாமானிய மக்களின் சுக, துக்கங்களில் பங்கெடுக்கும் உண்மையான சேவகனாக இருக்க வேண்டும். அந்த வகையில், தமிழக முதல்வர் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, ராதாபுரம் தொகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க 'நம்ம ராதாபுரம்' என்ற புதிய வெப்சைட்டைத் தொடங்கி வைத்துள்ள சட்டமன்ற உறுப்பினர் Dr.சதீஷ் கிறிஸ்டோபர் அவர்களின் இந்த அறிவியல் பூர்வமான, ஆக்கப்பூர்வமான உத்திக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

எனினும், இந்த இணையதளம் என்பது வெறும் 'தொழில்நுட்ப விளம்பரமாகவோ' அல்லது 'புகைப்பட ஆவணப் பதிவாகவோ' மட்டும் சுருங்கிவிடக் கூடாது. இணையதளத்தில் சாமானிய தாய்மார்களும், விவசாயிகளும் பதிவு செய்யும் ஒவ்வொரு மனுவின் மீதும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், தரைமட்ட அளவில் தீர்வு காணப்பட வேண்டும். லஞ்ச லாவண்யங்களுக்கு இடம் தராமல், மக்களின் நியாயமான கோரிக்கைகள் 100% நிறைவேற்றப்படுவதை எம்எல்ஏ Dr.சதீஷ் கிறிஸ்டோபர் அவர்கள் கறாராகக் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் என்பதே ராதாபுரம் தொகுதி வாழ் மக்களின் நெகிழ்ச்சியான வேண்டுகோளாக உள்ளது.



# “பள்ளி ஆட்டோ விபத்து எதிரொலி”: புளியங்குடியில் 10 ஆட்டோக்களுக்கு தலா ரூ.3000 ஸ்பாட் பைன்!

புளியங்குடி ஜூன்.21-

புளியங்குடியில் பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற ஆட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தின் அதிரடி எதிரொலியாக, போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் இணைந்து நடத்திய திடீர் சோதனையில், விதிமுறைகளை மீறி அதிக மாணவர்களை ஏற்றி வந்த 10 ஆட்டோக்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் அபராதம் விதித்து அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

ஓட்டுநரின் அலட்சியத்தால் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் ஆட்டோவில் பயணம் செய்த 6 பள்ளி குழந்தைகள் உட்பட 8 பேர் படுகாயமடைந்து, புளியங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களின் சுயலாபத்திற்காகப் பிஞ்சுக் குழந்தைகளை ஆட்டோக்களில் ஓவர்லோடாக, அதிக எண்ணிக்கையில் ஏற்றிச் செல்வதே இதுபோன்ற தொடர் விபத்துகளுக்குக் காரணம் எனப் பெற்றோர்கள் தரப்பில் புகார்கள் எழுந்தன.

அதிகாரிகளின் கூட்டு அதிரடிச் சோதனை:

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை 100% உறுதி செய்யும் நோக்கில், சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் (RTO) செல்வி, மோட்டார் வாகன ஆய்வாளர் ரவிவர்மன் மற்றும் புளியங்குடி காவல் ஆய்வாளர் ஷியாம்சுந்தர் ஆகியோர் தலைமையிலான அதிகாரிகள் மற்றும் போலீசார் முக்கியப் பகுதிகளில் அதிரடி வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அதிகமாகப் பள்ளி மாணவர்களை ஆட்டு மந்தைகளைப் போல ஏற்றி வந்த 10 ஆட்டோக்கள் கறாராகக் கண்டறியப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டது.

கண்காணிப்பு தொடரும் - ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை:

“பள்ளி மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தில் எவ்வித சமரசமும் செய்து கொள்ள முடியாது. ஆட்டோ மற்றும் பள்ளி வாகன ஓட்டுநர்கள் போக்குவரத்து விதிகளை 100% கடைப்பிடிக்க வேண்டும். இந்தத் தீவிரக் கண்காணிப்பு மற்றும் திடீர் சோதனை நடவடிக்கைகள் இனி வரும் நாட்களிலும் தங்குதடையின்றித் தொடரும்“ எனப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கறாராக எச்சரித்துள்ளனர்.



# “குறைந்த செலவில் அதிக மகசூல்... அலங்காநல்லூரில் பண்ணைப்பள்ளி!” செம்புக்குடிபட்டியில் 25 முன்னோடி விவசாயிகளுக்கு பயிற்சி!

அலங்காநல்லூர், ஜூன்.21-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் வட்டார வேளாண்மைத்துறையின் கீழ் இயங்கும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், தனிச்சியம் உட்கடை செம்புக்குடிபட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு “வேளாண் சூழலியல் பகுப்பாய்வு மற்றும் நெற்பயிரில் சூழலியல் கட்டமைப்பு” குறித்த சிறப்புப் பண்ணைப்பள்ளி நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்பண்ணைப் பள்ளியில் நெற்பயிர் சாகுபடி செய் யும் 25 முன்னோடி விவசாயிகள் திரளாகக் கலந்து கொண்டனர். அலங்கா நல்லூர் வட்டார அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளரும், வேளாண்மை உதவி இயக்குநருமான திரு. தெய்வேந்திரன் அவர்கள், ‘விளைநிலம் பாதுகாப்போம் இயக்கம்‘ மூலம் இயற்கை விவசாயம் மற்றும் மண்வளப் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு விரிவான பயிற்சி அளித்தார். அப்போது, “சமச்சீரான உரப்பயன்பாட்டை மேற் கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவிக்க முடியும். மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், சாகுபடிச் செலவைக் குறைத்து, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளப் பசுந்தாள் உரப்பயன்பாடுகள் இன்றியமையாதது” என்று அவர் எடுத்துரைத்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் பால்பாண்டி, விவசாயிகளின் தனித்துவ அடையாள எண், பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம் மற்றும் மத்தியமாநில அரசுகளின் மானியத் திட்டங்கள் குறித்துப் பேசினார். பண்ணைப்பள்ளியின் நிறைவாக, விவசாயிகளுக்குத் தொழில்நுட்பக் கருத்துக்கள் அடங்கிய பயிற்சி கையேடு வழங்கப் பட்டது.

இந்நிகழ்வில் அலங்கா நல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூற, பண்ணைப்பள்ளிக்கான அனைத்து விரிவான ஏற்பாடுகளையும் அட்மா திட்ட அலுவலர்கள் வசந்தி மற்றும் சௌந்தராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.



# அலங்காநல்லூரில் ராகுல் காந்தி பிறந்த நாள் விழா

அலங்காநல்லூர், ஜூன்.21-

நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள சின்னஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள ஐ.எஸ்.ஏ. குழந்தைகள் காப்பகத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. வடக்கு வட்டாரத் தலைவர்காந்தி, தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக ஓபிசி அணி மாவட்ட வழக்கறிஞர்பிரிவு நித்தியபிரியா, கலந்துகொண்டு காப்பகத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் அன்னதானம்

வழங்கினார்.தொடர்ந்து ராகுல்காந்தி நீடுடி வாழ காப்பகத்தில் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஜெயமணி, தெற்கு வட்டாரத் தலைவர் சுப்பாராயல், தொழிற்சங்க மாநில துணைத்தலைவர் சைமன்,மனித உரிமை மாவட்ட தலைவர்முத்து, வடக்கு மாவட்ட சிறுபான்மையின் பிரிவு விமல், மதுரை மாவட்டம் தொழிற்சங்க மாவட்ட தலைவர் சரவணகுமார், நகரத் தலைவர்கள் வைரமணி, சசிகுமார், மற்றும் முருகன்,உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முடிவில்குழந்தைகள் காப்பக மேலாளர் பிரியா,நன்றி தெரிவித்தார்.

# மேகேதாட்டு அணையை எதிர்த்து பிலிகுண்டுலு முதல் பூம்புகார் வரை 3 நாள் நடைபயணம்: அன்புமணி அறிவிப்பு

சென்னை, ஜூன்.21–

கர்நாடக அரசு மேகேதாட்டு அணையை கட்டக் கூடாது என மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பிலிகுண்டுலு முதல் பூம்புகார் வரை ஜூலையில் 3 நாட்கள் நடைபயணம் மேற்கொள்ள உள்ளதாக பாமக தலைவர் அன்புமணி அறிவித்துள்ளார்.




தமிழ்நாடு உழவர் பேரியக்கம் சார்பில் மேகேதாட்டு அணை, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து அனைத்து உழவர் சங்கத் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

இதற்கு அன்புமணி தலைமை தாங்கினார். விவசாய சங்க தலைவர்கள் பி.ஆர்.பாண்டியன், காவிரி தனபாலன், வேட்டவலம் கே.மணிகண்டன், தெய்வசிகாமணி உள்பட 60க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் ‘கூட்டுறவு பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் இரு மாநில உறவுகளை சிதைக்கும் வகையில் காவிரி குறுக்கே மேகேதாட்டு அணை கட்டத் துடிக்கும் கர்நாடக முதல்வர் டி.கே. சிவக்குமாருக்கு கண்டனம் தெரிவித்தும் முல்லை பெரியாறு அணை சிக்கல் தொடர்பாக பேச்சு நடத்துவதற்கான கர்நாடக அரசின் அழைப்பை ஏற்கக்கூடாது என்றும் நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.3,500 ஆக உயர்த்த வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அன்புமணி கூறியதாவது: விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடன் இணைந்து விரைவில் தமிழக முதல்வரை சந்திக்க உள்ளோம். கர்நாடக அரசு மேகேதாட்டு அணையை ஏன் கட்டக் கூடாது என மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, ஜூலை முதல் வாரத்தில் 3 நாட்கள் தொடர் நடைபயணம் மேற்கொள்ள உள்ளேன்.

இந்த நடைபயணம் தருமபுரி மாவட்டம் பிலிகுண்டுலுவில் தொடங்கி, மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் வரை நடைபெறும். இதன்மூலம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மேகேதாட்டு அணை கட்டப்பட்டால் தமிழகத்துக்கு சொட்டுத் தண்ணீர் கூட கிடைக்காத சூழல் உருவாகும். கர்நாடகாவில் தேர்தல் வரவிருப்பதால், அம்மாநில அரசு இவ்விவகாரத்தை இன்னும் தீவிரமாக அரசியலாக்கும். மத்திய அரசு நடுநிலையுடன் செயல்பட வேண்டும். ஆனால் தற்போது கர்நாடகாவுக்குச் சாதகமாகவே இருப்பதாகத் தெரிகிறது.

தமிழக அரசு தனது தேர்தல் வாக்குறுதிப்படி, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள கடன்களையும் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். நீலகிரியில் தேயிலை விவசாயிகளின் வீடுகளை ஜப்தி செய்யும் நடவடிக்கைகளை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



■ மதுரை மாவட்டம், ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் உள்ள மோயிசன் இறைச்சி கடை கடையில் கெட்டுப்போன இறைச்சி விற்கப்படுவதாக தகவல் பெறப்பட்டதனை தொடர்ந்து நியமன அலுவலர் சிவராமபாண்டியன் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சந்திரசேகர்,ராஜா, சந்திரமோகன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் கொண்ட குழு மேற்கண்ட கடையில் ஆய்வு மேற்கொண்டனர். மேற்கண்ட ஆய்வில் கெட்டுப்போன கோழியிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி எடையினை அதிகப்படுத்துவதற்காக ஊசி மூலமாக தண்ணீர் செலுத்துவது கண்டறியப்பட்டது. மேலும் கெட்டுப்போன இறைச்சிகள் சுமார் 1200 கிலோ மேற்கண்ட கடையில் கண்டறியப்பட்டு, பறிமுதல் செய்து மதுரை மாநகராட்சி சுகாதார அலுவலர்கள் மூலம் அழிக்கப்பட்டது. மேலும் இக்கடையில் கெட்டுப்போன மற்றும் சுகாதாரமற்ற இறைச்சி விற்பனை செய்ததற்காக அபராதமாக ரூ.13,000/ விதிக்கப்பட்டது. உணவு மேற்கண்ட கடையில் உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. மேற்கண்ட உணவு மாதிரிகளின் ஆய்வறிக்கை பெறப்பட்டதனை தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், பொதுமக்களின் நலன் கருதி மோயிசன் இறைச்சி கடையின் உணவு வணிகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது என்பதனை தெரிவித்துக் கொண்டனர்.

# சென்னையில் மாநகராட்சி சார்பில் 55 பள்ளிகளில் குளிர் கூரை அமைக்க நடவடிக்கை

சென்னை, ஜூன்.21–

மாநகராட்சி சார்பில் சென்னையில் 55 குளிர் கூரைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னையில் மேற்கொள்ளப்பட்ட முன்னோடி செயல்பாடுகளின் அனுபவத்தின் அடிப்படையில், பள்ளிகளில் குளிர் கூரை பூச்சு வேலைகள், வகுப்பறைகள் மற்றும் கூரைகளின் வெப்பநிலையை கணிசமாக குறைத்துள்ளன.

இந்த திட்டம் தற்போது தமிழ்நாடு காலநிலை மாற்றப் பணியின் ஒரு பகுதியாக விரிவு செய்யப்படுகிறது. மாநகராட்சியின் 49 பள்ளிகள், 6 அரசு பள்ளிகள் என மொத்தம் 55 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் 5 அரசுப் பள்ளிகளில் குளிர் கூரை



அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளிகளில் அதிக ஒளி பிரதிபலிக்கும் கூரையை குளிர் கூரையாக உருவாக்குவதன் மூலம் வெப்ப அழுத்தத்தை குறைத்து, மின்சார தேவையை குறைப்பதற்கும், அரசு பள்ளி கட்டமைப்பில் காலநிலைச் செயல்பாடுகளை மையப்படுத்துவதற்கும் உதவியாக உள்ளது.

இதுதொடர்பாக மாநகராட்சிப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கூட்டம் ரிப்பன் மாளிகையில் ஆணையர் சமீரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இணை ஆணையர் (கல்வி) க.கற்பகம், தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவன மேலாண்மை இயக்குநர் ஆஷா அஜித், முதன்மை செயல் அலுவலர் பகன் ஜக்தீஷ் சுதாகர், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் உதவி திட்ட இயக்குநர் துஷ்கர் ஹரி ஷிண்டே உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

# சட்டப்பேரவை கூட்ட தேதி அறிவித்த பிறகு வெள்ளை அறிக்கை வெளியிட்டது ஏன்? அமைச்சர் மரிய வில்சன் பதில்



சென்னை, ஜூன்.21–

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று நடைபெற்றது.

இதில் அருர் தொகுதி அதிமுக எம்எல்ஏ சம்பத்குமார் பேசும்போது, ‘‘சட்டப்பேரவை கூட்டத்தொடர் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், தமிழக அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை, ஏன் கூட்டத் தொடருக்கு முன்பாகவே வெளியிட வேண்டும். சட்டப்பேரவையில் வெளியிட்டிருக்கலாமே’’ என்றார்.

இதற்கு நிதியமைச்சர் மரிய வில்சன் பதில் அளித்து பேசியதாவது: தமிழகத்தின் தற்போதைய நிலை மக்கள் அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான், சட்டப்பேரவை கூடுவதற்கு முன்பாகவே முதல்வர் வெளியிட சொன்னார்.

அவரின்உத்தரவின்படியே, வெள்ளை அறிக்கையை வெளியிட்டோம். கடந்த 5 ஆண்டு திமுக ஆட்சியில், அதற்கு முந்தைய 60 ஆண்டுகளில் வாங்கிய கடனை விட அதிமாக கடன் வாங்கப்பட்டுள்ளது.

இன்று தமிழக மக்கள் ஒவ்வொருவரின் மீதும் ரூ.1.28 லட்சம் கடன் உள்ளது. இது மிகத்தெளிவாக மக்களிடம் சேர வேண்டும் என்பதற்காகவே வெளியிடப்பட்டது. இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

# பசுமை எரிசக்தி வளர்ச்சியை வலுப்படுத்த புதுப்பிக்கத்தக்க 5 எரிசக்தி மண்டலங்கள்: மின்துறை அமைச்சர் தகவல்

சென்னை, ஜூன்.21–

தமிழகத்தில் பசுமை எரிசக்தி வளர்ச்சியை வலுப்படுத்த புதிதாக 5 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையின் நிர்வாக செயல் திறனை மேம்படுத்தவும், முதலீட்டாளர்கள், பொதுமக்களுக்கு விரைவான, வெளிப்படையான சேவைகளை வழங்கவும் நிர்வாக மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, காற்றாலை, சூரிய மின்சக்தி திட்டங் களின் செயல் பாடுகளை விரைவுபடுத்தும் நோக்கில், ஏற்கெனவே இயக்கத்தில் இருந்த உடுமலைப் பேட்டை, திருநெல்வேலி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வட்ட அலுவலகங்களின் நிர்வாக அமைப்பு கைவிடப்பட்டு மறுசீரமைக்க முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, திருச்சி, நெல்லை, கோவை, மதுரை ஆகிய



இடங்களை தலைமையிடமாகக் கொண்டு 5 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்கள் உருவாக்கப்பட்டு, காற்றாலை, சூரிய மின்சக்தி திட்டங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து விரைவுபடுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், நெல்லை, கோவை, சென்னை மண்டலத்தில் சென்னை, காஞ்சி, வேலூர், திருவண்ணாமலை, திருச்சி மண்டலத்தில் திருச்சி, விழுப்புரம், தஞ்சை, மதுரை மண்டலத்தில் மதுரை, கரூர், ஈரோடு ஆகிய மின்பகிர்மான மண்டலங்களில் உள்ள காற்றாலை, சூரிய மின்சக்தி திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் நிர்வாகம், கண்காணிப்பு, செயல்பாட்டு பணிகள் உதவி செயற்பொறியாளர்களின் தலைமையில் மேற்கொள்ளப்படும்.

இவற்றின் செயல்பாட்டை வலுப்படுத்த தலைமையகத்தில் தனித் திட்ட அமலாக்கம், கண்காணிப்புக்கான கூடுதல் பொறுப்புகளும் சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு அனுமதி வழங்குதல், மின் உற்பத்தியை வெளியேற்ற தேவையான உள்கட்டமைப்பு ஒருங்கிணைப்பு, முதலீட்டாளர்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் வெளிப்படையான சேவை வழங்குதல் போன்றவை அதிக செயல்திறனுடன் மேற்கொள்ளப்படும்.

பொதுமக்கள், முதலீட்டா ளர்களுக்கு கூடுதல் பயனாக காற்றாலை, சூரிய மின்சக்தி திட்டங் களுக்கு அனுமதி வழங்கும் காலம் குறைக்கப்பட்டு, திட்டசெயல்பாடுகள் விரைவுபடுத்தப் பட்டு முதலீட்டாளர்கள், மின் உற்பத்தியாளர்களுக்கு ஒருங்கிணைந்த சேவை வழங்குவதன் மூலமாக பசுமை மின்சார உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரூ.245 கோடி மதிப்பிலான 46 கட்டுமானப் பணிகள் ரத்து: அறநிலையத்துறை அறிவிப்பு

சென்னை, ஜூன்.21–

இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் அறிவிக்கப்பட்டு, பல்வேறு காரணங்களால் தொடங்கப்படாமல் இருந்த ரூ.245.85 கோடி மதிப்பிலான 46 கட்டுமானப் பணிகளுக்கான நிர்வாக அனுமதியை ரத்து செய்து அறநிலையத் துறை உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து இந்து சமய அறநிலையத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள் கட்ட வெளியிடப்பட்ட அறிவிப்புகள் நீதிமன்ற தடையாணை காரணமாகவும், சம்பந்தப்பட்ட கோயில்களின் நிதிச்சுமையை கருத்தில் கொண்டும் தற்போது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு, தற்போது வரை தொடங்கப்படாத ரூ.115.77 கோடி மதிப்பீட்டிலான 29 திருமண மண்டபங்கள் கட்டும் பணிகள் மற்றும் ரூ.130 கோடி மதிப்பீட்டிலான 17 வணிக வளாகங்கள் கட்டும் பணிகள் என மொத்தம் ரூ.245.85 கோடி மதிப்பீட்டிலான 46 பணிகளுக்கான நிர்வாக அனுமதிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இந்த நிதியை கொண்டு கோயில்கள் மற்றும் பக்தர்கள் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்கள் அறிவிக்கப்படும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# “வெள்ளை அறிக்கையை காரணம் காட்டி தவெக அரசு செயல்படாமல் இருக்கக் கூடாது” அண்ணாமலை



சென்னை, ஜூன்.21–

“வெள்ளை அறிக்கையைக் காரணம் காட்டி தவெக அரசு செயல்படாமல் இருக்கக் கூடாது. இந்த பாதிப்புகளை சரிசெய்யத் தேவையான, உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்” என்று ‘வீ தி லீடர்ஸ்’ இயக்கத்தின் நிறுவனர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில், “தமிழக அரசின் நிதி நிலை குறித்து, தவெக அரசு வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கையில் ஆச்சரியப்படும் அளவுக்கு புதிய தகவல்கள் எதுவும் இல்லை. கடந்த 5 ஆண்டுகளில் மாநில நிதி நிர்வாகத்தில் ஏற்பட்ட சீர்கேடுகளை வெளிச்சம் போட்டு காட்டும் ஒரு ஆவணமாகவே இது உள்ளது.

தமிழகத்தின் மொத்தக் கடன் நிலுவை ரூ.10 லட்சம் கோடியை எட்டியுள்ளது. சராசரியாக தமிழக மக்கள் ஒவ்வொருவர் பெயரிலும் ரூ.1,28,934 கடன் சுமை உள்ளது. தமிழகத்தின் மொத்த வருவாயில், 22.8 சதவீதம், வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்துவதற்கே செலவிடப்படுகிறது. தமிழகத்தின் சொந்த வரி வருவாய் மற்றும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம், 202122ல் 5.93 சதவீதத்தில் இருந்தது. 202526ல் அது 5.45 சதவீதமாக குறைந்துள்ளது.

மின்சாரம், போக்கு வரத்து மற்றும் நுகர்பொருள் விநியோகம் தொடர்பான முக்கிய பொதுத்துறை நிறுவனங்களின் மொத்தக் கடன் ரூ.3.18 லட்சம் கோடியாக உள்ளது. பத்திரப் பதிவுத்துறை வருவாய் இழப்பு மற்றும் அமைப்பு சார்ந்த ஊழலால் ஏற்பட்ட பெரும் வருவாய் இழப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதேநேரம், தவெக அரசு இந்த வெள்ளை அறிக்கையைக் காரணம் காட்டி, செயல்படாமல் இருக்கக் கூடாது. இந்த பாதிப்புகளை சரிசெய்யத் தேவையான, உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இது தொடர்பாக, பொருளாதார நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் மட்டுமின்றி, தொழில், வர்த்தகம், நிர்வாகம், தொழில்நுட்பம், சமூக மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வல்லுநர்களையும் உள்ளடக்கிய, ஒரு ‘செயல்திறன் மிக்க’ ஆலோசனைக் குழுவை அமைத்து, தமிழகத்தை மீண்டும் வலுவான நிதிப் பாதைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என்று அண்ணாமலை கூறியுள்ளார்.

# “ஒட்டுமொத்த தமிழக மக்களும் போராடினால் தான் மேகேதாட்டு திட்டத்தை நிறுத்துவார்கள்” - வைகோ



ஆண்டிபட்டி, ஜூன்.21–

“மேகேதாட்டு அணை கட்டுவதற்கு எதிராக தமிழகத்தில் ஒட்டுமொத்த இளைஞர்களும், பொதுமக்களும் இணைந்து போராட வேண்டும். அப்போதுதான் அங்கு அணை கட்டுவதை நிறுத்தும் எண்ணம் மத்திய அரசுக்கு வரும்” என்று மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கடந்த 13ம் தேதியில் இருந்து மாவட்டந்தோறும் கருவேல மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இதன்படி இன்று (சனிக்கிழமை) தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே எஸ்எஸ்.புரத்தில் இப்பணியில் ஈடுபட்டார்.

பின்பு செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “சீமை கருவேல மரங்கள் நிலத்துக்குள் 50 முதல் 100 அடி வரை ஊடுருவி நிலத்தடி நீருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. இந்த மரங்களில் பறவைகள் கூடுகட்டாது. முட்டையிடாது. நிழலில் ஆடு, மாடுகள் தங்கினால் சினைகூட பிடிக்காது. அவ்வளவு விஷத்தன்மை கொண்ட மரம் இது. ஆகவே, தமிழக அரசும், பல்வேறு அமைப்புகளும் இந்த கருவேல மரங்களை அகற்ற முன்வர வேண்டும்.

மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கான கட்டுமான பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. அணை கட்ட எதிர்ப்பு தெரிவித்து தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. மகிழ்ச்சியை ஏற்படுத்த இது மட்டுமே போதாது. அண்ணா எப்படி மத்திய அரசை எதிர்த்து எழுச்சியை ஏற்படுத்தினாரோ, அதேபோல் தமிழகத்திலும் ஒட்டுமொத்த மக்கள் இணைந்து போராட்டம் நடத்தி மத்திய அரசை தமிழகம் எதிர்க்கிறது என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மேகேதாட்டுவில் அணை கட்டுவதை ஓரளவு தடுக்க முடியும்.

மேகேதாட்டுவில் அணை கட்டுவதை ஊக்குவிப்பதே மத்திய அரசும், பிரதமர் நரேந்திர மோடியும்தான். ஆகவே இதனை கண்டித்து தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களை மக்கள் ஸ்தம்பிக்க செய்ய வேண்டும், இளைஞர்கள், பொதுமக்கள் எப்போது கொந்தளிக்கிறார்களோ அப்போதுதான் மேகேதாட்டுவில் அணை கட்டுவதை நிறுத்தும் எண்ணம் மத்திய அரசுக்கு வரும்” என்று அவர் தெரிவித்தார்.



# நெல்லையில் புகழ்பெற்ற நெல்லையப்பர் காந்திமதி அம்மன் கோயில் ஆனித் திருவிழா கொடியேற்றத்துடன் துவக்கம்

நெல்லை, ஜூன்.21–

நெல்லையில் புகழ்பெற்ற நெல்லையப்பர் காந்திமதி அம்மன் கோயில் ஆனித் திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கியது. ஆனித் திருவிழாவின் முக்கிய நிகழ்வாக, 9ஆம் நாளான ஜூன் 28ல் நெல்லையப்பர் கோயில் தேரோட்டம் நடைபெறுகிறது; 10ஆம் நாளில் தீர்த்தவாரியுடன் நெல்லையப்பர்காந்திமதி அம்மன் கோயில் ஆனித் திருவிழா நிறைவடைகிறது. ஆனி மாதத்தில் 10 நாட்கள் நடைபெறும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருவிழாவைக் காண தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நெல்லையில் குவிந்துள்ளனர்.

இன்று அதிகாலை 4:00 மணிக்கே கோயில் நடை திறக்கப்பட்டு, சுவாமி மற்றும் அம்பாளுக்கு விஸ்வரூப தரிசனமும் சிறப்புப் பூஜைகளும் நடத்தப்பட்டன. கோயிலின் மகா மண்டபத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட யாகசாலையில் சிறப்பு ஹோமங்கள் வழிபாடு களுடன் தொடங்கின. காலை 6:30 மணியளவில் வேத மந்திரங்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க, பிரதான தங்கக் கொடிமரத்தில் முறைப்படி திருக்கொடியேற்றப்பட்டது. தொடர்ந்து கொடிமரத்திற்கு 16 வகையான திரவியங்களால் மகா அபிஷேகமும், தீபாராதனையும் நடைபெற்றன.

விழா நடைபெறும் 10 நாட்களும் காலை மற்றும் மாலை வேளைகளில் சுவாமிஅம்பாள் பல்வேறு சிறப்பு வாகனங்களில் எழுந்தருளி ரத வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்கள். இத்திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வான மகா தேரோட்டம் ஜூன் 28ம் தேதி அன்று மிக விமரிசையாக நடைபெற உள்ளது. தேரோட்ட நாளன்று விநாயகர், சுப்பிரமணியர், நெல்லையப்பர் (பெரிய தேர்), காந்திமதி அம்பாள் மற்றும் சண்டிகேசுவரர் ஆகிய 5 தேர்களும் நான்கு ரத வீதிகளிலும் பவனி வரும். பக்தர்களின் வசதிக்காகவும் பாதுகாப் பிற்காகவும் மாநகராட்சி நிர்வாகமும் காவல்துறையும் இணைந்து பலத்த பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்துள்ளனர்.

# மேகேதாட்டு அணை கட்ட கர்நாடக அரசுக்கு அனுமதி அளிக்கக் கூடாது: முதல்வரின் தனித் தீர்மானம் நிறைவேற்றம்



சென்னை, ஜூன்.21–

காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், புதிய அணை கட்டும் திட்டத்துக்கு எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தியும் சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானம், அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேகேதாட்டு அணை தொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் நேற்று அரசினர் தனித் தீர்மானம் கொண்டு வந்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது: காவிரி நடுவர் மன்றம் கடந்த 2007 பிப்.5ம் தேதி அளித்த இறுதி தீர்ப்பு, உச்ச நீதிமன்றம் கடந்த 2018 பிப்.16ம் தேதி அளித்த தீர்ப்பு ஆகியவற்றை மதிக்காமல், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் ஒப்புதலையும், மத்திய அரசின் எந்தவித அனுமதியையும் பெறாமல் தன்னிச்சையாக மேகேதாட்டுவில் அணை கட்ட கர்நாடக அரசு முயற்சிப்பதை ஏற்க முடியாது. கர்நாடக அரசின் இந்த செயலுக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறோம்.

கர்நாடக அரசின் மேகேதாட்டு அணை திட்டத்துக்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உட்பட எவ்வித அனுமதியையும் மத்திய அரசு அளிக்கக் கூடாது. காவிரி நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றமும், காவிரிப் படுகை ஒரு பற்றாக்குறை படுகை எனக் குறிப்பிட்டு, படுகையின் மொத்த நீரையும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்துவிட்டதால், காவிரிப் படுகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது.

இந்த விவகாரம் தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுப்பூர்வமான பிரச்சினை. எனவே, மேகேதாட்டுவிலோ, காவிரிப் படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது புதிய நீர்த்தேக்கத் திட்டத்தை, பிற படுகை மாநிலங்களின் ஒப்புதலின்றியும், மத்திய அரசின் அனுமதியின்றியும் மேற்கொள்ளக் கூடாது என கர்நாடகாவை மத்திய அரசு அறிவுறுத்த வேண்டும். கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வளக் குழுமம் பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளவோ, அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது. மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டத்தின்கீழ் புதிய நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தீர்மானத்தை முன்மொழிந்து முதல்வர் விஜய் பேசியதாவது: அரசியல் கட்சிகளுக்குள் கொள்கை, நிலைப்பாடுகளில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், மக்களுக்கான பிரச்சினை என்றால், எல்லா கட்சிகளுமே மக்கள் பக்கம்தான் நிற்கும். நமது விவசாயிகள், மக்களுக்காக நிற்க வேண்டியது நமது கடமை. நதிநீர் உரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் நம் அனைவருக்கும் உள்ளது.

அந்த உணர்வு அடிப்படையில், கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, யாரும் யாரையும் குறை சொல்லாமல் ஒட்டுமொத்த தமிழகத்துக்காக நாம் அனைவரும் ஓரணியில் நிற்பவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். நமது விவசாயிகள், தமிழக மக்களுக்காக கொண்டு வரப்படும் இந்த தீர்மானத்தை ஒருமித்த கருத்துடன் அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

இதைத் தொடர்ந்து, தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய திமுக, அதிமுக, காங்கிரஸ், விசிக, பாமக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், தேமுதிக, கொமதேக, மதிமுக, மமக, மஜக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

உதயநிதியின் கோரிக்கை ஏற்பு: எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசும்போது, ‘‘மேகேதாட்டு அணை கட்டும் பிரச்சினை ஒரு புதிய விவாதம் என்பதால், மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டத்தின்படி, புதிய நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என மத்திய அரசை இந்த பேரவை வலியுறுத்துகிறது எனும் திருத்தத்தை சேர்க்க வேண்டும்’’ என்றார்.

அதற்கு முதல்வர் விஜய், ‘‘மேகேதாட்டு பிரச்சினை குறித்து எனது தலைமையில் கடந்த மே 26ம் தேதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், தனி நடுவர் மன்றம் அமைப்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தனி நடுவர் மன்றம் அமைக்கத் தேவையான சட்ட நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அளித்த கருத்தை தனித் தீர்மானத்தில் கூடுதலாக சேர்க்கலாம்’’ என்றார். அதன்பிறகு, முதல்வர் முன்மொழிந்த திருத்தப்பட்ட தீர்மானம், பேரவையில் குரல் வாக்கெடுப்பு மூலமாக ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவு அளித்த அனைத்துக் கட்சிகளுக்கும் முதல்வர் நன்றி தெரிவித்தார்.

நல்லகண்ணு, பாரதிராஜா மறைவுக்கு இரங்கல்

முன்னாள் எம்எல்ஏக்கள் ராமசுவாமி, வீராசாமி, கண்ணன், ஆறுமுகம், சுவாமிநாதன், நாஞ்சில் முருகேசன் ஆகியோரது மறைவுக்கு சட்டப்பேரவையில் நேற்று இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து, இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, சட்டப்பேரவை முன்னாள் செயலர் சி.கு.ராமசாமி, திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஆர்.பி.சவுத்ரி, கே.ராஜன், இயக்குநர் பாரதிராஜா ஆகியோரது மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. இரங்கல் குறிப்புகளை பேரவைத் தலைவர் பிரபாகர் வாசித்து முடித்ததும், அனைத்து உறுப்பினர்களும் 2 நிமிடம் எழுந்து நின்று மவுன அஞ்சலி செலுத்தினர்.





# காவல்துறை அதிகாரிகள் சந்தீப் மித்தல், ஆர்.தினகரனுக்கு புதிய பதவி

சென்னை, ஜூன்.21–

காவல்துறை அதிகாரிகளான சந்தீப் மித்தல், ஆர்.தினகரனுக்கு புதிய பதவி வழங்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக உள்துறை செயலர் கே.மணிவாசன் பிறப்பித்த உத்தரவு: தமிழக காவல்துறை ஆயுதப்படைப் பிரிவு டிஜிபியாக இருந்த சந்தீப் மித்தல், தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆயுதப்படை பிரிவுக்கு தற்போது, வண்டலூரை அடுத்த ஊனமாஞ்சேரியில் உள்ள போலீஸ் அகாடமி இயக்குநராக உள்ள கூடுதல் டிஜிபி ஆர்.தினகரன் நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை இயக்குநரான டிஜிபி சீமா அகர்வாலுக்கு ‘தீயணைப்பு ஆணையத் தலைவர்’ பதவி கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கடந்த திமுக ஆட்சியில், ‘தீயணைப்பு ஆணையம்’ புதிதாக உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக ஓய்வு பெற்ற டிஜிபி சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டிருந்தார். இதேபோல், தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியமும் புதிதாக ஏற்படுத்தப்பட்டு ஓய்வுபெற்ற டிஜிபி சுனில் குமார் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இருதினங்களுக்கு முன்னர் இருவரும் தங்களது பதவிகளை ராஜினாமா செய்திருந்தனர். இந்நிலையில், அந்த இடங்களுக்கு தற்போது பணியில் உள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# சட்டப்பேரவையை வழிநடத்த மாற்று தலைவர்களாக 6 பேர் நியமனம்



சென்னை, ஜூன்.21–

சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்களாக 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழக சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆளுநர் உரையுடன் தொடங்கிய நிலையில், 2ம் நாள் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

முன்னாள் எம்எல்ஏ.க்கள் உள்ளிட்டோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து, சட்டப்பேரவையின் மாற்றுத் தலைவர்கள் பட்டியலை பேரவைத் தலைவர் ஜேசிடி.

பிரபாகர் வெளியிட்டார். சட்டப்பேரவையின் மாற்றுத் தலைவர்களாக விஜய் சரவணன் (தவெக), சத்யபாமா (தவெக), மதார் பதுருதீன் (தவெக), தாரகை கத்பர்ட் (காங்கிரஸ்), காதர் பாட்சா முத்துராமலிங்கம் (திமுக), தளவாய் சுந்தரம் (அதிமுக) ஆகிய 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவைத் தலைவர் ஜேசிடி. பிரபாகர், துணைத் தலைவர் ரவிசங்கர் ஆகிய இருவரும் அவையில் இல்லாத சூழலில், பேரவையை மாற்றுத் தலைவர்கள் வழிநடத்துவார்கள்.

# புதுவை ஜிப்மர் கல்லூரியில் கடந்த 6 ஆண்டுகளில் முதுநிலை மருத்துவப் படிப்புகளில் இருந்து 332 பேர் விலகல்




புதுச்சேரி, ஜூன்.21–

பல பிரச்சினைகளால் கடந்த 6 ஆண்டுகளில் புதுச்சேரி ஜிப்மரில் முதுநிலை மருத்துவப்படிப்புகளில் இருந்து 332 பேர் விலகியுள்ளனர். 230 பேர் மன நல ஆலோசனை பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக்கல்லூரி தேசிய அளவில் நான்காம் இடத்தில் உள்ளது. தேசிய அளவில் நடத்தப்படும் ஐஎன் ஐசிஇடி (மிழிமி சிணிஜி ) தேர்வில் வென்று இங்கு முதுநிலை மருத்துவம் பயிலச் சேரும் மாணவர்கள் பல பிரச்சினைகளை சந்திக்கின்றனர். சிலர் படிப்புகளில் இருந்து விலகியும், பலர் மனநல ஆலோசனையும் பெறும் நிலைக்கு தள்ளப்படுவதாக பரபரப்பான புகார்கள் எழுந்துள்ளன.

இதுதொடர்பாக புதுச்சேரி மேட்டுப்பாளையம் சுவாமிதாஸ் என்பவர், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் எழுப்பிய கேள்விகளுக்கு ஜிப்மர் தகவல் அதிகாரி அளித்துள்ள தகவல் விவரம்: கடந்த 202024 வரை பட்டமேற்படிப்பில் 276 பேர் விலகியுள்ளனர். மனநல ஆலோசனை 200 பேர் பெற்றுள்ளனர். மனநல பாதிப்புக்காக 12 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இரு பட்டமேற்படிப்பு மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர். தொடர்ந்து பல நாட்களுக்கு பணி தருவதாக இரு புகார்களும், சீனியர்கள் துன்புறுத்தல் தொடர்பாக இரு புகார்களும் வந்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல் கடந்த 2025ல் விவேகானந்தன் என்பவர் அனுப்பிய கேள்விகளுக்கு ஆர்டிஐயில் ஜிப்மர் அளித்த பதிலில், கடந்த 2025ல் 56 பேர் படிப்பிலிருந்து விலகியுள்ளனர். 30 பேர் மன நல ஆலோசனை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 2020 முதல் 2025 வரை 332 பேர் படிப்பிலிருந்து விலகியுள்ளனர். 230 பேர் மன நல ஆலோசனை பெற்றுள்ளனர் என்பது உறுதியாகிறது.

இதுபற்றி முதுநிலைமருத்துவ மாணவர்கள் தரப்பில் விசாரித்தபோது, “மூன்று மணி நேரம் மட்டும் தூங்கியும், ஒரு வேளை உணவு மட்டுமே சாப்பிட்டும், வார விடுமுறை இல்லாமல் நாளொன்றுக்கு 21 மணி நேரம் பணி செய்யும் நிலைக்கு தள்ளப்படுகிறோம். பல சீனியர் மாணவர்கள் தங்கள் பணிகளை ஜூனியர் மாணவர்கள் மேல் திணிப்பதால் வேலை நேரம் நீள்கிறது. சில சீனியர் மாணவர்கள் அனைவரின் முன்னிலையில் ஜூனியர் மாணவர்களை திட்டும் சூழலும் நிகழ்கிறது” என்றனர்.

ஆர்டிஐ தகவல் பெற்றவர்கள் மற்றும் பெற்றோர் தரப்பில் விசாரித்தபோது, “ஜிப்மரில் முதுநிலைமருத்துவம் படிப்போருக்காக பெரும்பாலான துறைகள் உண்மையான பணி நேரங்கள் மற்றும் வார விடுமுறை குறித்த எந்த பதிவையும் பராமரிக்கவில்லை. மத்திய அரசின் 1992ம் ஆண்டின் ரெசிடென்சி திட்ட விதிமுறைகள், ஒரு நாளின் பணி நேரத்தை அதிகப்பட்சமாக 12 மணி நேரமாகவும் வாராந்திர பணி நேரத்தை 48 மணி நேரமாகவும் நிர்ணயித்துள்ளது.

ஜிப்மரில் பயிற்சி மருத்துவர்கள் அதிகநேரம் பணி செய்ய வற்புறுத்தப்படுகின்றனர். இருப்பினும் மதிப்பெண் அச்சத்தால் பணி நேரம் குறித்து நிர்வாகத்திடம் புகார் தர மறுக்கின்றனர். முதுநிலை மாணவர்களுக்கு பாதிப்பு அதிகரிக்கும் சூழலில், பாதுகாப்பான சூழலை உருவாக்கித் தர வேண்டும். இதுதொடர்பாக ஜிப்மர் நிர்வாகம் விழித்தெழ வேண்டும்“ என்றனர்.

# 100 ஏக்கரில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியதால் விவசாயிகள் வேதனை



தஞ்சாவூர், ஜூன்.21–

தஞ்சை மாவட்ட சுற்றுவட்டாரத்தில் பெய்த கனமழையால் 100 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை கணக்கெடுத்து உரிய நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மெலட்டூர், கோவிந்தநல்லூர் உள்ளிட்ட ஊர்களில் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.



# திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பாக ராகுல் காந்தி பிறந்தநாள் விழா, அன்னதானம்!"

திருப்பூர், ஜூன்.21-

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பாகத் திருமூர்த்தி மலையில் மாபெரும் மக்கள் நலத்திட்ட உதவிகள் மற்றும் சிறப்பு வழிபாடுகள் வெகு விமர்சையாக நடைபெற்றன.

மும்மூர்த்திகள் தளத்தில் சிறப்புப் பூஜை:

திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் உயர்திரு. கே.ஆர்.கே.பி. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில், புகழ்பெற்ற ஆன்மீகத் தலமான திருமூர்த்தி மலை மும்மூர்த்திகள் தளத்தில் ராகுல் காந்தி அவர்களின் ஆயுள் ஆரோக்கியம் வேண்டியும், நாட்டின் நலன் வேண்டியும் சிறப்புப் பூஜை மற்றும் கூட்டு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

நலத்திட்ட உதவிகள் மற்றும் சிறப்பு அன்ன தானம்:

இப்பிறந்தநாள் விழாவின் முக்கிய நிகழ்வாக, மாவட்டத் தலைவர் கே.ஆர்.கே.பி. கிருஷ்ணசாமி அவர்களின் ஏற்பாட்டில், அப்பகுதியைச் சேர்ந்த ஏழை எளிய சாமானிய மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அள்ளி வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, கோயிலுக்கு வருகை தந்த நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் அஞ்சல் மற்றும் நேரிடையாகச் சிறப்பு அன்னதானமும் விறுவிறுப்பாக வழங்கப்பட்டது.

திரண்ட காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகள்:

இந்நிகழ்ச்சியில் உடுமலை நகர காங்கிரஸ் தலைவர் கோ. ரவி, எக்ஸ். டி.சி நிர்வாகி ஜி. ஜனார்த்தனன், சாலையூர் கனகராஜ் (மேற்கு வட்டாரம்), எலையமுத்தூர் வெங்கடேஷ் (கிழக்கு வட்டாரம் தலைவர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், எஸ்சி/எஸ்டி (SC/ST) பிரிவின் மாவட்ட தலைவர் ஏ.பி.வேலுச்சாமி, சின்னபாப்பனூத்து பாசன சபை தலைவர் சின்னு (எ) சின்னச்சாமி மற்றும் மாவட்ட காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.



# "எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் 56வது பிறந்தநாள்!" புளியங்குடியில் காங்கிரஸ் ஜிக்ஷிரி நிர்வாகிகள் இணைந்து கொண்டாட்டம்!

புளியங்குடி, ஜூன்.21-

இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் 56வது பிறந்தநாள் விழா, தென்காசி மாவட்டம் புளியங்குடி நகர காங்கிரஸ் கமிட்டி சார்பாக மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவாக வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

புளியங்குடி டி.என். புதுக்குடியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் திருவுருவச் சிலை முன்பாக இப்பிறந்தநாள் விழா நடைபெற்றது. புளியங்குடி நகர காங்கிரஸ் தலைவர் பால்ராஜ் முறைப்படி தலைமை தாங்கினார். மாவட்ட காங்கிரஸ் செயலாளரும் நகர்மன்ற உறுப்பினருமான சங்கரநாராயணன், மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் 'கலர்ஸ்' ஜாகீர் ஆகியோர் முன்னிலை வகிக்க, நகர காங்கிரஸ் துணைத் தலைவர் ஈஸ்வரமூர்த்தி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முன்னதாக 'மோளிஸ்' மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் சிறப்புப் பள்ளிக்கு காங்கிரஸ் மற்றும் தவாக நிர்வாகிகள் நேரில் சென்றனர். அங்கு பயிலும் மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்குப் பிறந்தநாள் இனிப்புகளையும், மதிய உணவுப் பார்சல்களையும் வழங்கி நெகிழ்ச்சியை ஏற்படுத்தினர். அதனைத் தொடர்ந்து காமராஜர் சிலை அருகிலும் பொதுமக்களுக்கு இனிப்புகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு உணவுப் பார்சல்களும் விநியோகிக்கப்பட்டன.

சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்ற தவெக நிர்வாகிகள்:

இவ்விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளர்களாகத் தமிழக வெற்றிக்கழகத்தின் மாவட்ட செயலாளர் விஜய் மாரியப்பன் மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பொதுக்குழு உறுப்பினரும், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவருமான வழக்கறிஞர் 'சங்கை' கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் ஐ.என்.டி.யு.சி மத்திய சங்க துணைத் தலைவர் இராசு, தமிழக வெற்றிக்கழக பிரமுகர் சௌந்தர பாண்டியன், மாவட்ட காங்கிரஸ் பிரதிநிதி அம்மையப்பன், நகர காங்கிரஸ் துணைத் தலைவர்கள் தங்கையா, ராஜ் @ அருணாசலம், செயலாளர் முகமது முத்தலிப், செயற்குழு உறுப்பினர்கள் 'ரியல் எஸ்டேட்' முருகையா, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் தர்ம மணி, ஐ.என்.டி.யு.சி சேவியர், பாக்யா பரமசிவன், 'மாதா' அந்தோணிசாமி, கோபி, ராமையா ஆகியோர் பங்கேற்றனர். மேலும், தமிழக வெற்றிக்கழக நகர செயலாளர் மாரி கணேசன், செயற்குழு உறுப்பினர் 'சுனாமி' ராஜா உள்ளிட்ட காங்கிரஸ் மற்றும் தவாக நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். நிறைவாக, நகர காங்கிரஸ் பொதுச் செயலாளர் முகமது ஜவஹர்லால் அனைவருக்கும் நன்றி கூறினார்.



■ இந்திய தேசிய காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இந்திய பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தியின் 56வது பிறந்தநாள் முன்னிட்டு, விநாயகர் மிஷின் கிருபானந்த வாரியார் மருத்துவக் கல்லூரி, லோட்டஸ் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம், மாநகர் காங்கிரஸ் சார்பாக ரத்ததான முகாம் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது. சேலம் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டின் துனை மேயர் சாரதா தேவி முகாமினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சி சஞ்சய் காந்தி தலைமையில் நடைபெற்றது. ராஜ்குமார், கந்தசாமி, நடராஜ், சரவணன், திருமுருகன், பழனிசாமி, சீனிவாசன், ஜெயக்குமார், பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# "காமராஜர் உருவாக்கிய 'மனமகிழ் மன்றம்' பெயரில் மதுக்கடையா?" தமிழக முதல்வருக்கு அகரக்கட்டு லூர்து நாடார் அதிரடி கடிதம்!

தென்காசி, ஜூன்.21-

டாஸ்மாக் மதுபானக் கடைகளுடன் இணைந்து செயல்படும் பார்களுக்கு 'மனமகிழ் மன்றம்' என்று சூட்டப்பட்டுள்ள பெயரை உடனடியாக நீக்க வேண்டும் என்றும், பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்த உன்னத திட்டங்களை மீட்டெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தித் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் தமிழக அரசுக்குக் கொள்கை ரீதியிலான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.




காமராஜரின் உன்னத நோக்கமும் 1961 கல்வெட்டும்:

இது குறித்துத் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் திரு. அகரக்கட்டு லூர்து நாடார், தமிழக முதலமைச்சருக்கும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருக்கும் எழுதியுள்ள விரிவான கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:

"பெருந்தலைவர் காமராஜரின் ஆட்சிக் காலத்தில், கிராமங்களில் வாழும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் நம் தமிழர்களின் தொன்மையான பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், மொழி, கலை, வீரம் மற்றும் கல்வி போன்ற நற்பண்புகளைப் பின்பற்றி வளர வேண்டும் என்பதற்காகவும், நம் கலாச்சாரம் அழிந்துவிடக் கூடாது என்பதற்காகவும் 'மனமகிழ் மன்றங்கள்' தொடங்கப்பட்டன. கிராம மக்கள் ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டுச் சகோதரத்துவத்தோடு, ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே இதன் தூய நோக்கமாகும்.

இதற்கு வரலாற்றுச் சான்றாக, கடந்த 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி அன்று 'காரவிளை' என்ற கிராமத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் நேரில் தொடங்கி வைக்கப்பட்ட மனமகிழ் மன்றத்தின் கல்வெட்டு இன்றளவும் சாட்சியாக அங்கே இருக்கிறது."

இவ்வாறு அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆட்சியாளர்களின் வரலாற்றுப் பிழை - பெயர் மாற்றக் கோரிக்கை:

மேலும் அக்கடிதத்தில், "காமராஜர் எந்தவொரு உன்னத நோக்கத்திற்காக இந்த மனமகிழ் மன்றங்களைத் தொடங்கினாரோ, அந்த உன்னத நோக்கத்தை முற்றிலும் கொச்சைப்படுத்தும் விதமாக, கடந்த கால ஆட்சியாளர்கள் மதுபானக் கடைகளுடன் இணைந்த பார்களுக்கு 'மனமகிழ் மன்றம்' என்று பெயர் சூட்டி இழிவுபடுத்தியுள்ளனர். இந்தச் செயல் பெருந்தலைவரின் நல்ல திட்டத்தைச் சிதைப்பதாகவே அமைந்துள்ளது.

எனவே, மதுபானக் கடைகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் 'மனமகிழ் மன்றம்' என்ற பெயரை உடனடியாக நீக்கிவிட்டு, அதற்குத் தகுந்த மாற்றுப் பெயரைச் சூட்ட வேண்டும். அத்தோடு, தமிழர்களின் பண்பாடு, கலை, கல்வி மற்றும் வீரத்தை இன்றைய இளைஞர்கள் போற்றிப் பாதுகாக்கும் வகையில், காமராஜர் கொண்டு வந்த உண்மையான 'மனமகிழ் மன்றங்களை' தமிழக அரசு மீண்டும் கிராமங்கள்தோறும் புதிய உத்வேகத்துடன் தொடங்க வேண்டும்" எனத் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் அகரக்கட்டு லூர்து நாடார் வலியுறுத்தியுள்ளார்.



# மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கருப்பொருளைக் கையில் எடுத்த சோனா குழுமம்! தியாகு வள்ளியப்பா தலைமையில் பிரம்மாண்டக் கொண்டாட்டம்!

சேலம், ஜூன்.21-

ஆண்டுதோறும் ஜூன் 21ஆம் தேதி உலகளவில் சர்வதேச யோகா தின விழா மிக விமரிசையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நிகழாண்டு மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் அறிவித்துள்ள "ஆரோக்கியமான முதுமைக்கான யோகா" என்ற உன்னதக் கருப்பொருளை மையமாகக் கொண்டு, சேலம் சோனா கல்வி நிறுவனங்களின் சார்பில் சர்வதேச யோகா தின விழா கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

துணைத்தலைவர் தலைமையில் திரண்ட பேராசிரியர்கள்:

சோனா கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா தலைமையில் நடைபெற்ற இந்த எழுச்சிமிகு விழாவில், கல்லூரியின் இயக்குநர் வீ.கார்த்திகேயன், சோனா கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் எஸ்.ஆர்.ஆர்.செந்தில்குமார், கனகராஜ், காதர்நவாஷ், கவிதா, தர்மசம்வர்த்தினி மற்றும் பேராசிரியர்கள் உட்பட 1,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு அணிவகுத்து யோகாசனங்களைச் செய்தனர்.

உடல், மனம் காக்கும் பண்டைய இந்தியப் பயிற்சி:

விழாவில் சோனா கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் தியாகு வள்ளியப்பா சிறப்புரையாற்றுகையில், "ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் தேதி உலகமே ஒன்று சேர்ந்து சர்வதேச யோகா தினத்தைக் கொண்டாடி மகிழ்கிறது. இந்த உலகளாவிய நிகழ்வானது, இந்தியாவின் பண்டைய காலத்துப் பயிற்சியான யோகாவின் முக்கியத்துவத்தை உலகிற்குப் பறைசாற்றுகிறது. மனிதனின் உடல், மனம் மற்றும் உணர்ச்சி ரீதியிலான நல்வாழ்வை மேம்படுத்தவும், வயது முதிர்ந்த காலத்திலும் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான முதுமையை உறுதிப்படுத்தவும் யோகா கலை எவ்வளவு இன்றியமையாதது என்பதை இந்த நாளின் கருப்பொருள் நமக்கு வலியுறுத்துகிறது" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.

யோகா நடனமும் சான்றிதழ் வழங்கிப் பாராட்டுகளும்:

இவ்விழாவின் முக்கிய அம்சமாக, சோனா கல்வி நிறுவனங்களின் மாணவ, மாணவிகள் இணைந்து நடத்திய அசாத்திய 'யோகா நடன நிகழ்ச்சி' பார்ப்போரைக் வியப்பில் ஆழ்த்தும் வகையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, யோகாசனப் போட்டிகளில் சிறப்பாகச் செயல்பட்டு முத்திரை பதித்த மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டு, சிறப்புப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.








# தினமும் வணங்கப்படத்தக்கவர் தந்தை! திசையன்விளை வி.எஸ். ஆர் மெட்ரிக் பள்ளியில் நெகிழ்ச்சியான தந்தையர் தின விழா

திசையன்விளை, ஜூன்.21-

நெல்லை மாவட்டம் திசையன்விளையில் உள்ள வி.எஸ்.ஆர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், மழலைகளின் பாச மழையோடும், பெற்றோர்களின் உணர்ச்சிப் பெருக்குடனும் 'தந்தையர் தின விழா' மிக உன்னதமாகக் கொண்டாடப்பட்டது.

பள்ளித் தாளாளர் முன்னிலையில் உணர்ச்சி மயமான விழா:

இவ்விழாவிற்கு வி.எஸ். ஆர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் வி.எஸ்.ஆர் ஜெகதீஷ் மற்றும் பள்ளி இயக்குநர் சௌமியா ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலை வகித்து விழாவினை சிறப்பித்தனர். பள்ளி முதல்வர் விஜயா தினகரன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இதில் பள்ளியில் பயிலும் மழலைச் செல்வங்களின் தந்தையர்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டனர்.

மழலைகளின் நடனமும்... தந்தையர்களின் கேக் கொண்டாட்டமும்:

விழாவின் ஆக்கப்பூர்வமான தொடக்க மாக, மழலைச் செல்வங்கள் தங்களின் அசாத்தி யமான நடனத் திறமையால் தங்களை ஈன்றெடுத்த பெற்றோர்களை மகிழ்வித்தனர். தொடர்ந்து, தந்தையர் தின வாழ்த்து மடல்களையும், இனிப்புகளையும் மழலையர் தங்களின் தந்தையருக்கு வழங்கிப் பாசத்தை வெளிப்படுத்தினர். விழாவின் உச்சக்கட்டமாக, விழாவில் ஒலித்த தந்தையர் குறித்த சிறப்புப் பாடல்கள் அனைவரின் நெஞ்சையும் உருகச் செய்தன. தொடர்ந்து, அங்கு திரண்டிருந்த தந்தையர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து கேக் வெட்டி, தங்கள் குழந்தைகளுக்கு அன்போடு ஊட்டி மகிழ்ந்தது பார்ப்போரைக் கண் கலங்கச் செய்யும் உணர்ச்சிகரமான காட்சியாக அமைந்தது.

தந்தையின் அளப்பரிய பங்கு குறித்து முதல்வர் உரை:

விழாவில் பள்ளி முதல்வர் விஜயா தினகரன் சிறப்புரையாற்றுகையில், "ஒவ்வொரு மாணவனின் ஒட்டுமொத்த வளர்ச்சியிலும், அவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் தந்தையின் பங்கு என்பது அளப்பரியது" என்று ஆழமாக எடுத்துரைத்தார். மேலும், தினமும் வணங்கப்படத்தக்கவர் தந்தை, தியாகத்தின் உன்னத உருவம் தந்தை, கடவுள் நமக்குக் கொடுத்த ஆகப்பெரும் வரமே அப்பா என்பதைப் பிஞ்சுக் குழந்தைகள் தங்களின் இளம் வயதிலேயே அறிந்து கொள்ளும் நோக்கில் இத்தந்தையர் தின விழா மிக நேர்த்தியாகக் கொண்டாடப்பட்டது. நிறைவாக, கலந்துகொண்ட அனைத்துப் பெற்றோர்களுக்கும் முதல்வர் விஜயா தினகரன் தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.



# புளியங்குடியில் முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம்!

புளியங்குடி, ஜூன்.21-

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மாபெரும் ரத்ததான முகாம் புளியங்குடி வடக்கு நகர நிர்வாகிகள் சார்பில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

புளியங்குடி அரசு நூலகம் எதிரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இம்முகாமை, தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமை தாங்கி, ரத்ததான முகாமினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கான முழு ஏற்பாடுகளையும் புளியங்குடி வடக்கு நகர செயலாளர் எம். வெங்கடேஷ், மற்றும் நகர நிர்வாகிகள் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை இணைந்து மிகச்சிறப்பாக செய்திருந்தார்.

இம்முகாமில் நகர நிர்வாகிகள் ராஜலட்சுமி, கற்பகம், முத்துமாரி, கலைமுருகன், சசிகலா, சுப்பையா, பழனி குமார், கணேஷ் ராஜ், மாதவன், ராஜேஸ்வரன், மாரிமுத்து, மகேஷ் முருகப்பெருமாள், சிவசித்து, நகர செயற்குழு உறுப்பினர் மாஸ்டர் முருகப்பெருமாள், மற்றும் வழக்கறிஞர் அணி இணை அமைப்பாளர் இராஜேந்திர பூபதி, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜான்சன், வர்கீஸ் மொபைல் ஆல்பர்ட், ஒன்றியப் பகுதி நிர்வாகிகள், மாவட்ட அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு ஆர்வமுடன் ரத்ததானம் செய்தனர். முதலமைச்சரின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த சமூக நற்பணி முகாம் அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000